**O.S.No.356/2013**

**Date:04.06.2018**

வாதி தரப்பு சாட்சி 1 - கிருஷ்ணன், த-பெ.கே.சி.குருசாமி

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

4ம் பிரதிவாதி ராஜலெட்சுமி தாவாச் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். என்னுடைய அப்பாவும், 1, 2 பிரதிவாதிகளின் அப்பாவும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். என் அப்பா, பிரதிவாதிகளின் அப்பா கே.சி,சேதுராமன் மற்றும் அவர்களது சகோதரிகள் 1947ல் பாகம் செய்து கொண்டனர் என்றால் குடும்ப ஏற்பாட்டு ஆவணம் எழுதப்பட்டது. அதில் தாவாச் சொத்து என் பாட்டி சின்னம்மாளுக்கு ஜீவனாம்சத்திற்காக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். குருவம்மாள் என்பது யார் என்றால் என் அப்பாவுடன் பிறந்த தங்கை ஆவார். குருவம்மாளுக்கு மேற்படி ஆவணத்தில் ஈ செட்யூல் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். குருவம்மாளுக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். சின்னம்மாளுக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல, வாரிசுகள் இருக்கிறார்கள். குருசாமி, சேதுராமன் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். சின்னம்மாளுக்கு திருமணமாகி வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். தாவாச் சொத்து 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் கே.சி.சேதுராமன் பெயரில் பட்டா தாக்கலாகி உள்ளது என்றால் தாக்கலாகி உள்ளது, ஆனால் மோசடியாக தாக்கலாகி உள்ளது. தாவாச் சொத்துக்கும், என் வீட்டுக்கும் எவ்வளவு தூரம் என்றால் என் வீட்டிற்கு அருகே உள்ளது. தாவாச் சொத்து மொத்தம் 37 செண்டில் 17 செண்டு தேசிய நெடுஞ்சாலைக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2009ல் எடுக்கப்பட்டதா என்றால் நான் வெளியூரில் இருந்தேன். அதனால் அதன் விபரம் தெரியாது. நான் எந்த ஊரில் இருந்தேன் என்றால் கமுதியில் இருந்தேன். கமுதியில் என்ன செய்தேன் என்றால் லாரி தொழில் செய்தேன். எந்த வருடத்திலிருந்து, எந்த வருடம் கமுதியில் லாரி தொழில் செய்தேன் என்றால் 1982லிருந்து தற்போது வரை பார்த்து வருகிறேன். நான் 1982லிருந்து நான் ஊருக்கு வந்து போய்க்கொண்டுதான் இருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய நிரந்தர முகவரி தாவாச் சொத்து அருகில்தான் என்றால் சரிதான். நான் ஒரு மாதத்திற்கு எத்தனை முறை வந்து செல்வேன் என்றால் பத்து நாளைக்கு ஒரு முறை,



பதினைந்து நாளைக்கு ஒரு முறை இரவு வந்து விட்டு, காலையில் சென்று விடுவேன். என் வீட்டில் யார், யார் இருப்பது என்றால் என் மனைவி, பிள்ளைகள் இருக்கிறார்கள்.

அவர்கள் தாவாச் சொத்து அருகில் உள்ள எனது வீட்டில்தான் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்தில் தேசிய நெடுஞ்சாலை ரோடு போட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தேசிய நெடுஞ்சாலை துறையில் இழப்பீடு தொகை எதுவும் கேட்டேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. மேற்படி இழப்பீடு தொகையை 1, 2ம் பிரதிவாதிகளின் தந்தைதான் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என் அப்பா குருசாமி உயிருடன் இருக்கும் போதே, 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் கே.சி.சேதுராமனுக்கும், இடையே ஈ செட்யூல் சொத்தைப் பொறுத்து ஒரு வாய்க்கரால் பாகம் ஏற்பட்டது என்றும், குருசாமியின் சம்மத்தின் அடிப்படையில் பட்டா கே.சி.சேதுராமனுக்கு மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. ஆகவே மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்பதால் தேசிய நெடுஞ்சாலைத்துறையினரால் தாவாச் சொத்தின் ஒரு பகுதி கையகப்படுத்தப்பட்ட போதும், அதற்குரிய இழப்பீட்டுத் தொகை கேசி.சேதுராமனுக்கு வழங்கப்பட்ட போதும் நான் எந்தவிதமான ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி ராஜலெட்சுமி தாவாச் சொத்தில் என்ன செய்திருக்கிறார் என்றால் எதுவும் செய்யவில்லை, காலியிடமாகத்தான் உள்ளது. நான் வழக்கிற்காக எந்தவிதமான வேலியும் அமைக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி ராஜலெட்சுமி தாவாச் சொத்தை எந்த வருடம் கிரையம் பெற்றார் என்றால் 2007ல் கிரையம் பெற்றார். கிரயம் பெற்ற விபரம் தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக தெரியும். கே.சி.சேதுராமன் பெயரில்தான் பட்டா உள்ளது என்பது நெடுஞ்சாலைத்துறை ஆர்ஜிதம் செய்த போது எனக்குத் தெரியும் என்றால் தெரியாது. தாவாச் சொத்து 4ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய போதே எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல. என் அப்பாவுக்கு பாகம் கிடைத்த பின்னர்தான் தாவாச் சொத்தைப் பொறுத்து நான் உரிமை கொண்டாட முடியும் என்றால் சரியல்ல. என் அப்பா காலத்திலேயே தாவாச் சொத்து 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு உரிமை மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பாகம் இருக்கிறதா இல்லையா என்பதை ஊர்ஜிதம் செய்யாமல், 4ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட கிரய ஆவணம் செல்லாது என்று நான் விளம்புகை பரிகாரம் கேட்பதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2013ம் வருடம் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது மட்டும்தான் 4ம் பிரதிவாதி கிரையம் பெற்ற விபரம்



தெரியும் என்பதற்கு ஏதேனம் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு காலம் தாழ்ந்து போடப்பட்டுள்ள வழக்கு என்றால் சரியல்ல. தற்போது தாவா இடத்தின் மதிப்பு உயர்ந்து விட்ட காரணத்தால் மேற்படி சங்கதிகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி மேற்படி சொத்தை உரிய பட்டாதாரர் மற்றும் உரிமையாளரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றாலும், அவருடைய செயலில் எந்தவிதமான மோசடியும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3, 4

மற்றும் 6 ஆகியவைகள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி தன்னுடைய பதில் அறிவிப்பிலேயே அவருடைய உரிமை பற்றி தெரிவித்தும், அவரிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய் அதிகாரிகளுக்கு மனு அனுப்பியதாக வா.சா.ஆ.10, 12 தாக்கல் செய்துள்ள நிலையில், அது சம்பந்தமாக நடவடிக்கை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த மனுக்கள் என்ன ஆனது என்றால் அப்படியே உள்ளது. எனக்கு உண்மையிலேயே உரிமை இருந்திருந்தால் மேற்படி வருவாய்த்துறை நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்து, 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு பட்டா மாறியது தவறு என்ற நிரூபித்திருப்பேன் என்றால் சரியல்ல, எனவேதான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் சொத்து எனக்கு பாத்தியம் என்று விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். எனவே நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.